**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.380/2022

வா.சா.1 முருகவேல் த/பெ வையாபுரி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1.RCOP. NO.3/22 என்ற வழக்கானது வழக்கு சொத்தில் இருந்து பிரதிவாதியை காலி செய்யவேண்டும் என்று கேட்டுதான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் பிரதிவாதி தாவா சொத்தில் இருந்து காலி செய்து கொள்வதாக கூறி ஒரு குறிப்பாணை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி குறிப்பாணை தாக்கல் செய்த பிறகும் நான் மேற்கண்ட வழக்கை நடத்தினேன் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கில் விசாரணைக்குபிறகு குறிப்பாணை படி பிரதிவாதி வழக்கு சொத்தில் இருந்து காலி செய்யவேண்டும் என்று உத்திரவிடப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் 6 விசைதறிகள் பிரதிவாதிக்கு சொந்தமாக உள்ளது என்றால் சரிதான். அந்த 6 விசைதறிகளுக்கு சேர்ந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தார்மிஷன், மின்மோட்டார் மற்றும் சாப்ட் ஆகியவை உள்ளன. மேற்படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை இ.ம.எண்.2/2022ல் முன் ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி பிரதிவாதிகள் சொத்து குடோனில் அப்படியே உள்ள நிலையில் உள்ளது. அதனை பூட்டி நீதிமன்ற அமின் மேற்கண்ட குடோனை பூட்டி சாவியை என்னிடம் ஒப்படைத்தார். இது 25.06.2025 அன்று நடந்தது என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி சொத்து மற்றும் குடோன் என் வசத்தில் தான் உள்ளது. மேற்படி 12.12.2021 தேதியில் நான் பூட்டி வெல்டு வைத்ததைதான் அமினா உடைத்து என்னிடம் பிரதிவாதியின் சொத்து

மற்றும் குடோன் சாவியை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பூட்டை மட்டும் தான் உடைத்தார். வெல்டு வைக்கவில்லை.

4. 12.12.2021க்கு பின்னிட்டு குடோன், தறி என்னுடைய சுவாதீனத்தில் இருக்கும் பட்சத்தில் ரூ.1,52,500/– வாடகை பாக்கி இருப்பதாக பொய்யாக சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி ஏற்கனவே எனது மீது நிரந்தர உறுத்துக்கட்டளை கூறி அசல் வழக்கு எண்.337/2018ல் தாக்கல் செய்து அதில் மாதவாடகை ரூ.2,500/– என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது சரிதானா என்றால் சரிதான்.

5. மேற்கண்ட வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகு என்னுடைய தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு வந்த தாவா பிராதுநகலை வா.சா.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 10.07.2018 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.3 ஆவணத்தின் 2வது பக்கத்தில் வழக்கு தாக்கல் செய்யும் வரை வாடகை தொகை நிலுவையின்றி செலுத்தியுள்ளேன் வாடகை பாக்கி இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்த வா.சா.3 ஆவணத்திற்க்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாடகை செலுத்துவதற்க்கு ரசீது கொடுக்கும் வழக்கம் இல்லை என்றால் சரிதான். நான் வாடகை வாங்குவதை என்னுடைய வருமானவரி கணக்கில் கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதன் அடிப்படையில் 23.08.2016 தேதியிலிருந்து 23.09.2021 வரை வாடகை பாக்கி உள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. எந்தவித அடிப்படை ஆதாரமின்றி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது பொய்யானது என்றால் சரியல்ல. சட்டப்படி இந்த வழக்கு தாக்கல் செய்யாமல் 61 மாதத்திற்க்கு வாடகை நிலுவையில் இருப்பதாக சட்டத்திற்க்கு புறம்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 12.12.2021 தேதியில் நான் குடோனை வெல்டு வைத்து பூட்டியதன் காரணமாக அந்த காலகட்டத்திற்க்கு பின்னிட்டு வாடகை எதுவும் நான் கோரவில்லை என்றால் சரியல்ல.

8. மாதம் ரூ.5,000/- எந்த அடிப்படை ஆதாரத்தின் பெயரில் நான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் குடோன் இடிந்த நிலையில் இருப்பதால் கேட்டு உள்ளேன். அதன் காரணமாக தான் பிரதிவாதி காலி செய்ய கேட்டு இருந்தேன். அதற்க்குரிய வீடியோவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 12.12.2021 முதல் தாவா குடோன் என் வசம் உள்ளதால் பிரதிவாதியிடம் வழக்கில் கோரியுள்ளவாறு சேதார தொகை கேட்கயிலாது என்றால் சரியல்ல.

9. இந்த பிரதிவாதி வாடகை முன்பணமாக ரூ.50,000/-த்தை 2014ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.